**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வானூர்.**

திரு.D.பொன்வேந்தன்,B.Tech,M.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் உறுதி மொழி சட்டம் பிரிவு 105-வது ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | - | திருமதி. தெரேஸ் மஞ்சு | E.P.No. | 3/2024 |
| க/பெ. | - | | ம.சா. | 2 |
| கிராமம் | - | | | |
| வட்டம் | - | | | |
| தொழில் | - | | | |

30.06.2025.

எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை.

1. மனு சொத்து யார் பெயரில் உள்ளது என்றால் என்னுடைய பெயரில் உள்ளது. அசல் வழக்கு எண். 72/2008 மற்றும் மேல் முறையீட்டு வழக்கு எண்.18/2014 வழக்குகளில் நான் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். மனு சொத்தை பொறுத்து நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து எனக்கு ஆதரவாக தீர்ப்பாணை ஏதேனும் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. 1ம் எதிர்மனுதாரரான இறந்துபோன ரங்கநாதன் என்பவரின் வாரிசுகளை இம்மனுவில் தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் எனக்கு தெரியாது.

2. ஆரோவில் காவல் நிலையத்தில் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக நான் புகார் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். புகார் கொடுத்ததற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். திண்டிவனம் மாண்பமை கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் S.C.No.80/2024 வழக்கில் மாண்பமை மெட்ராஸ் உயர்நீதிமன்றம் CrL. O.P.No.17640/2025 ல் தடை உத்தரவு வழங்கியுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் எதிர்மனுதாரரான இறந்துபோன ரங்கநாதன் என்பவரின் வாசுரிகளை இம்மனுவில் தரப்பினராக சேர்க்காததால் இம்மனு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.

Taken down by me in the presence of the withess read over th the witness are admitted by him/her to be correct.

District Munsif

Vanur.